2003 நவம்பர் 7]

ரூபாய் 12 கோடியில் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நிறைவு செய்யப்பட்டால், என்னுடைய தொகுதி மக்கள் முழுமையாகப் பயன் பெற்று குடிநீர் கிடைக்கப் பெறுவார்கள். இந்தக் கேள்வியை நான் வைத்தபோது, அத்திப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். தற்போது நீதிமன்றத்திலுள்ள வழக்கும் முடிவுற்றதாக அறிகிறேன். தற்போது தடையேதும் இல்லை. எனவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு இந்தத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கைத் திரும்பப் பெற பல்வேறு சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வழக்கைத் திரும்பப் பெற்றவுடன் விரிவான மதிப்பீடு தயார் செய்து ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் உரிய நிர்வாக ஒப்புதல் பெற்ற பிறகு நிதி ஆதாரத்தை இறுதி செய்தபின் இத்திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றில் கடந்த 3 ஆண்டுகளாக வெள்ளம் வராத காரணத்தினாலே நிலத்தடி நீர் ரொம்ப கீழே போய்விட்ட காரணத்தினால் நீர் ஆதாரம் இல்லை. ஆகவேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நாங்களெல்லாம் கோரிக்கை வைத்து அவர்கள் ஒகேனக்கல்லிலிருந்து வேலூருக்கு (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை, ஒகேனக்கல்லிலிருந்து வேலூருக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

87—

சுற்றுச் சூழல் பாதிப்பு

***19017—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள கடற்கரைச் சாலைகளில் சென்னை துறைமுகத்திலிருந்து யூரியா, பொட்டாஷ் மற்றும் வேதிப் பொருட்களை

ஏற்றி வரும் லாரிகளிலிருந்து வேதிப் பொருட்கள் சாலையோரங்களில் கொட்டுவதால் ஏற்படும் சுற்றுச் சூழல் ஆபத்தைத் தடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1989 ஆம் ஆண்டைய தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் உற்பத்தி, சேமித்தல் மற்றும் இறக்குமதி விதிகளின்படி தமிழநாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இரசாயனப் பொருட்களை கையாளும் தொழிற்சாலைகளுக்கு இத்தகைய இரசாயனப் பொருட்களை எடுத்துச் செல்லும்போது தகுந்த, போதிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றியே கையாள வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறது. மேலும் இரசாயன வேதிப் பொருட்கள் ஏற்றிவரும் லாரிகள் தார்பாலின் கொண்டு மூடப்பட்டுள்ளதா என்பதை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் துறைமுகப் போக்குவரத்து மேலாளரும் கண்காணித்து வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் பல்வேறு உரத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அந்த உரத் தொழிற்சாலைகளுக்கு சென்னை துறைமுகத்திலிருந்து யூரியா, பொட்டாஷ், கந்தக அமிலங்கள் லாரிகளிலே கொண்டு செல்லப்படுகின்றன. அப்படி கொண்டு செல்லப்படுகின்றபோது, சாலைகளின் இருபுறங்களிலும் அவற்றைக் கொட்டிச் செல்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகின்றது. அதன் மூலமாக வெயில் காலங்களில் அதனுடைய சுற்றுப்புறங்களில் இருக்கின்ற குடிசைகள் தீப்பற்றி எரிகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. மேலும் தொழிற்சாலைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற விதை உரங்கள், விளைச்சல் யூரியாக்கள், காம்ப்ளெக்ஸ் போன்றவை தயாரிக்கப்பட்ட பிறகு, அவற்றிலிருந்து வெளியேறுகின்ற உரக் கழிவுகள், ஜிப்சம் இவை பூமியில் கலந்து குடிநீரில் மாசு படிந்து மக்கள் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகின்றது. அவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் concrete சாலை அமைத்து, அதன்மேல் இந்த உரக் கழிவு ஜிப்சத்தை வெளியேற்றினால், மக்கள் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து

2003 நவம்பர் 7]

விடுபடுவதோடு மட்டுமல்லாமல், அவற்றைத் தவிர்த்து சுற்று,ப்புறச் சூழலைப் பாதுகாக்கின்ற வகையில் மக்களுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கும். எனவே மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் பாதுகாப்பான சூழ்நிலையில் வேதிப்பொருட்கள் கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்வாரா என பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைகளை நேரில் சென்று ஆய்வு செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கின்ற விதத்தில் இரசாயனத் தொழிற்சாலைகள் செயல்பட வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியிருக்கின்றது. பொது மக்களுக்கு எந்த சுற்றுச்சூழலும் பாதிக்காத வகையில் தொழிற்சாலைகள் செயல்பட மாசுக் கட்டுப்பாடு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயனப் பொருட்கள் ஏற்றிச் செல்லும் லாரிகளில் தார்ப்பாய் மூடி எடுத்துச் செல்ல வேண்டும் என்ற விதிமுறை இருந்தாலும் — ஒரு சில சமயங்களில் ஏற்படுகின்ற இந்த இரசாயனக் கசிவின் காரணமாக — கடந்த 2 மாதங்களுக்கு முன்புகூட திருவொற்றியூர் காலடிப்பேட்டையில் ஏற்பட்ட இரசாயனக் கசிவின் காரணமாக, குழந்தைகள், பெரியவர்களுக்கு கண் எரிச்சல் ஏற்பட்டு, அதன் பிறகு தீயணைப்புத் துறையின் மூலமாக தண்ணீர் அடிக்கப்பட்டு அதனுடைய அமிலத் தன்மை குறைக்கப்பட்ட பிறகு சகஜ நிலைமை திரும்பியது. இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்படுவதற்கு கூண்டு லாரிகள் மூலம்தான் இந்த இரசாயனப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைமுகத்திலிருந்து இரசாயனப் பொருட்களை ஏற்றிச் செல்கின்ற லாரிகள் தார்ப்பாலின் போட்டு மூடியிருந்தால்தான் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றன என்பதை பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.